மலர் 1 இதழ் 3 ஜனவரி, 2017 ISSN : 2454-3993

முடத்தாமக்கண்ணியாரும் படைப்புலகமும்

ப. மணிகண்டன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பூ.சா.கோ.கலை அறிவியல் கல்லூரி. கோவை

இலக்கியப் படைப்புகள் சமுதாயத்தின் வெளிப்பாடுகளாக இருந்தாலும், அதைப் படைப்பவரின் பங்களிப்பினை ஒதுக்கிவிட முடியாது. இலக்கியப் படைப்பாளி தான் எதிர்கொண்ட சமுதாய விழுமியங்களைத் தமது வாழ்க்கைச் சூழல், வாழ்க்கைத் தரம், சமூக மதிப்பு, மொழியாற்றல், பட்டறிவு,மக்களுடனான தொடர்பு போன்ற பல்வேறு காரணிகளின் தாக்கத்தின் பின்னணியிலேயே இலக்கியமாகப் படைக்கின்றார். எனவே, அவர் தாம் தமது உள்ளத்தில் உருக்கொண்ட கருத்தினை வெளிப்படுத்துவதில் தமக்கென ஓர்ஆளுமையை உருவாக்கிக் கொள்கிறார். அவ்வகையில் முடத்தாமக்கண்ணியாரின் புலமைத்திறனை காண்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

முடத்தாமக்கண்ணியார்

சங்க இலக்கியத்தில் பத்துப்பாட்டில் அடங்கிய பாடல்களைப் பாடியவர்களுள் முடத்தாமக்கண்ணியார் ஒருவர் மட்டுமே பெண்பாற் புலவர்ஆவார். இது இவரது தனிச்சிறப்பினைக் காட்டுவதாகும். மேலும் எட்டுத்தொகையுடன் இவர் பாடிய பாடல்கள் ஏதும் இடம்பெறவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. பொருநராற்றுப்படை, பத்துப் பாட்டுள் இரண்டாவதாக அமைந்தது 248 அடிகளையுடையத்து வஞ்சியடிகள் இடையில் வந்த ஆசிரியப்பாவால் ஆகியது. பரிசில் பெறக்கருதிய ஒரு பொருநனைப் பரிசில் பெற்ற பொருநன் ஒருவன் சோழன் இளஞ்சேட் சென்னியின் மகனாகிய சோழன் கரிகாற்பெருவளத்தானிடம் ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதில் கூறப்படும் பொருநன் போர்க்களம் பாடுபவனாக அமையப் பாடப்பட்டுள்ளது. முடத்தாமக் கண்ணியார் என்னும் பெயர் இப்புலவர் முடவர் என்னும் காரணத்தினால் வந்தது என்று ஒரு கருத்து உண்டு. வளைந்த ஒளியுள்ள தலைமாலை என்னும்

பொருள்படும் முடத்தாமக்கண்ணி என்றசொற்றொடரை இப்புலவர் தமது கவிதை ஒன்றில் கையாண்டிருக்கலாம் அல்லது அசையும் வலிமை இல்லாத ஒளியுள்ள கண்களைப் பற்றிப் பாடி இருக்கலாம் அல்லது கண்களையுடைய முடப்பெண் ஒருத்தியை இச்சொற்றொடர் குறிக்கலாம் என்கிறார் துரை. அரங்கனார்.

தொல்காப்பியம் சொல்லதிகாரம் இடையியல் இயற்பெயர் முன்னர் (நூ-22)

என்ற நூற்பா உரையில் ஆர் விகுதி பன்மையொடு முடிவதற்கு முடத்தாமக்கண்ணியார் வந்தார் என்று உரையாசிரியர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். இது இவரது சிறப்பைக் காட்டுகின்றது.

முடத்தாமக்கண்ணியாரின் பொருநராற்றுப்படை நெடும்பாட்டாக அமைந்துள்ளதால் இவரது புலமைத்திறத்தினையும், கவிநுட்பத்தினையும் பாடலின் பல இடங்களிலும் காணமுடிகின்றது. ஆற்றுப்படை இலக்கியம் என்பது சங்க இலக்கியங்களுள் தனிச்சிறப்பு வாய்ந்தது. வறுமையில் வாடி வள்ளலிடம் சென்று பரிசில் பெற்று வரும் பாணனோ, பொருநனோ, துடியனோ,விறலியோ, கூத்தரோ தமது வழியில் எதிர்ப்படும் தன்னைப் போன்று வறுமையுற்ற கலைஞர்களைக் கண்டு இரக்கமுற்றுத் தமக்குப் பரிசுகொடுத்த வள்ளலிடம் செல்லுமாறு அவர்களை வழிப்படுத்துதல் (ஆற்றுப்படுத்துதல்) இவ்விலக்கியத்தின் உள்ளடக்கமாக அமைகின்றது. அவ்வாறு ஆற்றுப்படுத்தும்பொழுது அக்கலைஞன் தான் பரிசில் பெற்ற வள்ளலின் நாடு, நகரம், அவ்வூருக்குச் செல்லும் வழி, இயற்கைவளம் அவனது கொடைத்திறம், விருந்தோம்பல் பண்பு, நாட்டு மக்களின் விருந்தோம்பல் போன்றவற்றை எடுத்துக்கூறுவதாகப் பாடல் அமைக்கப்பெறுகின்றது. எட்டுத்தொகை இலக்கியங்களைப் போன்று அடி எல்லையால் குறுக்கப்படாததால் இவ்விலக்கிய வகையினைப் புலவர்கள் தமது புலமைத்திறனை வெளிக்காட்டும் சிறந்த வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொண்டனர் என்பதை அவர்களது பாடல்களின் வழியாக அறியமுடிகின்றது.

சங்கப் பேரரசர்களுள் இன்றளவும் அனைவராலும் நினைவு கூறப்பெறும் வரலாறு போற்றும் ஒரே பேரரசன் சோழன் கரிகாற் பெருவளவன் ஆவான்.அவ்வரசனிடம் பரிசில் பெற்று வரும் பொருநன், தன் வழியில் எதிர்ப்படும் பொருநனைக் கரிகால் பெருவளவனிடம் ஆற்றுப்படுத்துவதாகப் பொருநராற்றுப்படை அமைந்துள்ளது. எவற்றையெல்லாம் அவ்வாறு ஆற்றுப்படுத்தும்பொழுது அப்பொருநன் பதிவுசெய்கின்றான் என்பதை முடத்தாமக்கண்ணியார் பின்வரும் வரிசையில் கவிநயம் பொங்கப் பாடலாக வடித்துள்ளார்.

பாடலின் தொடக்கம் ஆற்றுப்படுத்தப்படும் பொருநனை அழைப்பதாகஅமைகின்றது. அடுத்து ஆற்றுப்படுத்தும் பொருநன் கூறுவனவாக, பாலையாழின் அமைப்பு, பாடினியின் முழுவருணனை (கேசாதிபாதி),காடுறைகின்ற தெய்வத்திற்குக் கடன் கழித்தல், பரிசு பெற்றோன் பெறாதோனை விளித்தல் (அழைத்தல்), பரிசு பெற்றோன் பாடிய முறை,அரசனது விருந்தோம்பல் சிறப்பு, இரவில் சுற்றத்துடன் கவலையின்றித் தூங்கி எழுதல், காலையில் அரசவைக்குச் செல்லுதல், அரசனை அணுகுதல், உணவு கொடுத்து ஓம்பிய முறை,

ஊருக்குச் செல்லப் பரிசிலன் விரும்புதல், அரசன் பிரியமனமின்றிப் பரிசு வழங்கி அனுப்புதல், கரிகால் வளவனது சிறப்புகள், வெண்ணிப்போர் வெற்றி, கரிகாலனது கொடையின் சிறப்பு, சோழநாட்டின் இயற்கை வளமும் அழகும் நல மயக்கமும் நல்லாட்சியும், காவிரியின் வெள்ளச் சிறப்பு, இறுதியாக காவிரி சூழ்ந்த சோழநாட்டின் வயல் வளம் என்பவை பாடலின் பலபகுதிகளாக அமைந்துள்ளன. அடிப்படையில் இவை ஒரு நாடகத்தின் காட்சிகளைப் போன்று அமைந்து படிப்பவர் மனதுள் அக்காட்சிகளை நிழலாடச் செய்கின்றது.மா. ராசமாணிக்கனார் முடத்தாமக்கண்ணியாரின் பொருநராற்றுப் படைப்பாக்கம் குறித்துப் பதிவுசெய்துள்ள கருத்து இங்கு நோக்கத்தக்கது. ''முடத்தாமக் கண்ணியார் தமது பொருநராற்றுப்படையில் பொருநனது யாழைப் பற்றிய பல விவரங்களையும், விறலியின் வருணனையையும், சோழநாட்டு வளத்தையும் நன்கு கூறியுள்ளார்.ஆயின், பிற ஆற்றுப்படையில் கூறியிருத்தல் போலப் பொருநன் செல்லத்தக்க வழியையும் அவ்வழிகளில் உள்ள சிறப்புடைய ஊர்களையும், பொருநன் கரிகாலனைக் காணத்தக்க உறையூரை அல்லது காவிரிப்பூம்பட்டினத்தையும், குறியாமல் விட்டது வருந்தத்தக்கது. இவர் அவ்வழியையும், அவ்வழியிலிருந்த ஊர்களையும், உறையூரையும் காவிரிப்பூம்பட்டினத்தையும் நேரில் அறிந்திருப்பாராயின் தவறாது கூறியிருப்பார் என்பதில் ஐயமில்லை.இவர் முடவராய் இருந்தமையே அவற்றை அறியாது இருந்தமைக்கு ஏற்றகாரணம் எனலாம்''.

புலவர் ஒரு நாடகம் போன்றே பாடலின் முதல்காட்சியாகப் பாணரின் வறுமைநிலையைப் பாடமாக்குகின்றார். உணவு உண்ணாமல் வாடக்கூடிய பொருநரை,

"அறாஅ யாணர் அகன்தலைப் பேர்ஊர்
சாறுகழி வழிநாள் சோறு நசைஉறாஅ
வேறுபுலம் முன்னிய விரகு அறி பொருந! (பொகு 1-3)

என்று அறிமுகப்படுத்துகின்றார். பாடலின் முதல் அடியில் அவலத்தைக் காட்ட மனமில்லாமல் அகன்தலைப் பேரூர் என்று மகிழ்வூட்டும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார் புலவர். அடுத்து ஆற்றுப்படுத்தக்கூடிய பொருநரின் உயரிய பண்பினை அவனது கூற்றின் வாயிலாகவே காட்டுகின்றார்.

எதிர்ப்படும் இளைஞர்கள் தாம்செல்லும் வழியறியாமல் தவறான பாதையில்சென்று பயனடையாமல் போகக்கூடும், எனவே அவர்களை உரியவழியில் ஆற்றுப்படுத்துவது தனது கடமை என்று கூறுவதாகப் பின்வரும் பாடலடிகள் அமைந்துள்ளன.

அறியாமையின் நெறி திரிந்து ஒராஅது
அற்று எதிர்ப்படுதலும் நோற்றதன் பயனே
போற்றிக் கேண்மிதி, புகழ் மேம்படுந! (பொரு 56-60)

கரிகால் வளவனை அறிமுகப்படுத்தும் காட்சியில் அவ்வரசனின் முழு வரலாற்றினையும் சுருக்கமாகவும், தெளிவாகவும், வரலாற்று நோக்குடன் எவ்வித மிகைப்பாடுகளும் இன்றி அழகான இனிமை பயக்கும் சொற்களைப் பாநலம் குறையாது இணைத்துப் பாடலாக உருவாக்கியுள்ளார், புலவர்.

...... வென்வேல்
உருவப் பல்தேர் இளையோன் சிறுவன்
முருகற் சீற்றத்து உருகெழு குருசில்
தாய்வயிற்றிருந்து தாயம் எய்தி
எய்யாத் தெவ்வர் ஏவல் கேட்ப
செய்யார் தேஎம் தெருமரல் கலிப்ப
..... பிறந்துதவழ் கற்றதன் தொட்டு சிறந்தநன்
நாடு செகிற்கொண்டு நாள்தொறும் வளர்ப்ப
இருபெரு வேந்தரும் ஒருகளத்து அவிய
வெண்ணித் தாக்கிய வெருவரு நோன்தாள்
கண்ஆர் கண்ணி கரிகால் வளவன் (பொரு 129-148)

என்று அரசனது பிறப்பு முதல் போர் வெற்றிவரை முழு வரலாற்றையே இப்பாடல் பதிவுசெய்துள்ளது. அரசனது கொடைச் சிறப்பினைப் பதிவு செய்ய எண்ணிய புலவர், பொருநன் வாயிலாகவே அதை வெளிப்படுத்தியுள்ளார்.

பாசி வேரின் மாசொடு குறைந்த
துன்னற் சிதாஅர் நீக்கி தூய
கொட்டைக்கரைய பட்டு உடை நல்கி
பெறல் அருங் கலத்தில் பெட்டாங்கு உண்க என
பூக்கமழ் தேறல் வாக்குபு தரத்தர
......வால்ஒளி முத்தமொடு பாடினி அணிய
கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
...... பால்புரை புரவி நால்கு உடன்பூட்டி
காலின் ஏழடி பின்சென்று கோல் இன்
தாறு களைந்து ஏறு என்று ஏற்றி
.... செல்க என விடுக்குவன் அல்லன் (பொரு 153-177)

என்ற பொருநன் கூற்றுப்பாடலில் எவ்வாறெல்லாம் வளவன் பரிசு கொடுத்துச் சிறப்பிக்கக் கூடியவன் என்று சொல்லிவருவதாகக் கூறிக்கொண்டு போய் இறுதியில் செல்க என விடுக்குவன் அல்லன் என்று முடிக்கின்ற நிலையில் புலவரது புலமைத்திறனும், வெளிப்பாட்டு உத்தியும் நன்கு புலப்படுகின்றன. இதை வழங்கக்கூடியவன் என்று

சொல்லிவிட்டால் அரசனது வள்ளல்தன்மையை ஓர் எல்லைக்குள் அடக்கிவிடும் என்பதால் இதைமட்டும் கொடுத்து செல்லுங்கள்! என்று அனுப்பும் குறுகிய மனம் கொண்டவன் அல்ல நீங்களே போதும் என்று சொன்னால்கூட கொடுப்பதை நிறுத்தாத ஒப்பற்ற வள்ளல் என்ற பொருளில் மேற்குறிப்பிட்ட தொடரை அவர் கையாண்டுள்ளார்.

சோழநாட்டின் வளத்தையும், இயற்கை எழிலையும் பலவாறாக வருணித்துள்ளார் புலவர். அவ்வாறு வருணிக்கும்பொழுது முதலாவதாகச் சோழநாட்டின் நிலவியல் அமைப்பைப் பின்வருமாறு பதிவு செய்துள்ளது புலவரின் உலகியல் அறிவினை வெளிப்படுத்துவதாய் உள்ளது.

திரை பிறழிய இரும் பௌவத்துக்

கரை சூழ்ந்த அகன் கிடக்கை (பொரு 178-179)

இப்பாடலடி சோழநாடு பெருங்கடலின் நீண்ட கரை சூழ்ந்தநிலப்பகுதியைக் கொண்டிருந்ததைக் குறிப்பிடுகின்றது. மேலும், ஊரில் உள்ள மக்களைக் காட்ட எண்ணிய புலவர் மணலில் விளையாடும் சிறுவரையும், மன்றத்தில் வழக்கினைக் கேட்டு நீதி உரைக்கும் முதியோரையும் (சான்றோர்) காட்சிப்படுத்தியுள்ளார். இது, புலவரின்மதிநுட்பத்திற்குத் தக்க சான்றாகும். முதலையும், முடிவையும் காட்டினாலேஅனைத்தும் அடக்கமாகிவிடும் என்னும் பொருளில் இந்த உத்தியைக் கையாண்டுள்ளார் அவர்.

“இளையோர் வண்டல் அயரவும் முதியோர்

அவைபுகு பொழுதில் தம்பகை முரண் சொலவும் (பொரு187-188)

இதனைத் தொடர்ந்து நாட்டு வளத்தையும், இயற்கைக் காட்சிகளையும்,கடலின் அழகையும் வருணித்துச் சென்றுள்ளார். அவ்வாறு செல்லும்பொழுது இறுதியாக மயிலின் ஆடல் அழகைக் கூறி முடிக்கின்றார். இறுதியாக அமைந்த பின்வரும் இயற்கை வருணனை இலக்கிய நயம் ததும்பும் சொற்களால் ஓவியமாகத் தீட்டப்பட்டுள்ளது.

கோட் தெங்கின் குலை வாழை

கொழுங் காந்தள் மலர் நாகத்து

துடிக் குடிஞை குடிப் பாக்கத்து

யாழ் வண்டின் கொளைக்கு ஏற்ப

கலவம் விரித்த மட மஞ்ஞை

நிலவு எக்கர் பல பெயர (பொரு208-213)

சோழப் பெருவேந்தன் கரிகாற் பெருவளவன் ஒரு குடையின் கீழ் பண்டைய தமிழகம் முழுவதையும் அரசாண்டான் என்று பதிவு செய்யஎண்ணிய புலவர், அதற்கு ஓர் உத்தியைக் கையாண்டுள்ளார். குறிஞ்சி,முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நானில மக்களையும், அந்நில உயிரினங்களையும் திணை மயக்கத்திற்குக் கொண்டு சென்று சோழனின்ஆட்சியின்கீழ் நானில மக்களும் ஒருவருக்கொருவர் உறவுகொண்டு

பண்டமாற்று செய்து தங்களுக்குள் எவ்வித வேறுபாடும் காணாது சிறப்பாக வாழ்ந்தனர் என்று கூறிமுடிக்கின்றார். இவ்வுத்தி, வேறு எச்சங்கப் புலவரும் கையாண்டிராத புதிய உத்தியாக அமைந்துள்ளது வியப்பினை ஏற்படுத்துகின்றது. அந்நில மயக்கக் காட்சி பின்வருமாறு

தேன் நெய்யொடு கிழங்கு மாறியோர்
மீன் நெய்யொடு நறவு மறுகவும்
தீங்கரும்போடு அவல் வகுத்தோர்
மான்குறையோடு மது மறுகவும்
குறிஞ்சி பரதவர் பாட நெய்தல்
நறும்பூங் கண்ணி குறவர் சூட
கானவர் மருதம் பாட அகவர்
நீல்நிற முல்லைப் பல்திணை நுவல
கானக்கோழி கதிர்குத்த
மனைக் கோழி தினைக் கவர
வரை மந்தி கழி மூழ்க
கழி நாரை வரை இறுப்ப
தண் வைப்பின் நால்நாடு குழீஇ
மண் மருங்கினான் மறு இன்றி
ஒரு குடையான் ஒன்று கூடற
பெரிது ஆண்ட பெருங்கேண்மை
அறனொடு புணர்ந்த திறன்அறி செங்கோல்
அன்னோன் வாழி வென் வேற் குருசில் (பொரு214-231)

தோற்ற வருணனையில் முடத்தாமக்கண்ணியாரை மிஞ்சியபுலவர் இல்லை என்னும் அளவிற்கு மிகச்சிறப்பான சொல்லாட்சியை இவரது பாடல்கொண்டுள்ளது. பாடலின் தொடக்கத்தில் அமைந்துள்ள பாலையாழின் தோற்ற வருணனையும், பாடினியின் அங்கங்களின் வருணனையும் படிப்பவரை மெய்மறக்கச் செய்வதோடு, கண்முன்னே எழில் ஓவியமாகவும் காட்சிப்படுத்திவிடுகின்றன. பாலை யாழின் அமைப்பினைப் புலவர் மொத்தம் பத்தொன்பது அடிகளில் (பொரு 4-22) சொற்களின் சேர்க்கையால் கட்டமைத்துக் காட்டுகின்றார். இதற்குச் சான்றாகப் பாலை யாழின் பத்தல் என்னும் பகுதியினைப் போர்த்தியுள்ள போர்வையின் மென்மைத்தன்மையை மகப்பேறு அடைந்து சில மாதங்களான பெண்ணின் வயிற்றின் மையத்தில் நேர்கோடாகச் செல்லக்கூடிய சிறு மயிர்த்தொகுதியினை உவமையாகக் கையாண்டுள்ளதைக் கூறமுடியும். அவ்வுவமை பின்வருமாறு

எய்யா இளஞ்சூற் செய்யோள் அவ்வயிற்று
ஐதுமயிர் ஒழுகிய தோற்றம் போல
பொல்லம் பொத்திய பொதியுறு போர்வை (பொரு 6-8)

யாழின் வடிவத்தினைக் காட்சிப்படுத்தியதோடு நின்றுவிடாமல், அதைமீட்டி இசை உண்டாக்கிய முறையினை மோனையும், எதுகையும் விளையாடும்படியாக வடித்துள்ளார், புலவர்.

வாரியும் வடித்தும் உந்தியும் உறழ்ந்தும்
சீருடை நன்மொழி நீரொடு சிதறி (பொரு 23-24)

பொதுவாக ஆண்புலவர்களே பெண்களைச் சிறப்பாகவும், உணர்ந்தும் அங்கம் அங்கமாக வருணித்துப் பாட முடியும் என்ற எண்ணத்தை இப்பெண்பாற் புலவர் மறுதலிப்பது போல் பாடினியின் அங்கங்களை ஒவ்வொன்றாகச் சிறந்த ஒப்புமைகளைக் கொண்டு வருணித்துச்சென்றுள்ளார். பாடினியின் கூந்தலில் தொடங்கி, பாதத்தில் முடிகின்றது இவரது வருணனை.

அறம் போல் கூந்தல் பிறைபோல் திரு நுதல்
கொலைவில் புருவத்து கொழுங்கடை மழைக்கண்
இலவு இதழ் புரையும் இன்மொழித் துவர்வாய்
பலஉறு முகத்தின் பழிதீர் வெண்பல்
மயிர்குறை கருவி மாண்கடை அன்ன
பூங்குழை ஊசற் பொறை சால்காதின்
நாண்அடச் சாய்ந்த நலம்கிளர் அருத்தின்
ஆடுஅமைப் பணைத்தோள் அரிமயிர் முன்கை
நெடுவரை மிசைய காந்தள் மெல்விரல்
கிளிவாய் ஒப்பின் ஒளிவிடு வள்உகிர்
அணங்கு என உருத்த சுணங்கு அணி ஆகத்து
ஈர்க்கு இடை போகா ஏர்இள வனமுலை
நீர்ப்பெயர்ச் சுழியின் நிறைந்த கொப்பூழ்
உண்டு என உணரா உயவும் நடுவின்
வண்டு இருப்பு அன்ன பல்காழ் அல்குல்
இரும்பிடித் தடக்கையின் செறிந்து திரள் குறங்கின்
பொருந்து மயிர் ஒழுகிய திருந்து தாட்குஒப்ப
வருந்து நாய் நாவின் பெருந்தகு சீறடி
பெடைமயில் உருவின் பெருந்தகு பாடினி (பொரு 25-47)

இப்பாடலடிகளில் இறுதியாகப் பாடினியின் பாதத்தின் மென்மையைஉணர்த்த எண்ணிய புலவர் ஓடிக் களைத்த நாயினுடைய சிவந்த நாவிற்கு ஒப்புமைப்படுத்தியுள்ளது உவமேயத்தின் வடிவம், நிறம், பண்புஅனைத்தையும் ஒருசேரக் காட்சிப்படுத்தும் சிறந்த உவமையாக அமைந்துள்ளது.

இறுதியாகத் தனது பாடலை மன்னனை வாழ்த்தி நிறைவு செய்ய எண்ணிய புலவர், அவனது நாட்டின் உணவு உற்பத்தி சிறக்கட்டும் என்றுகூறி வாழ்த்தியுள்ளது, புலவருக்கு உள்ள அறிவுத் திறனைக் காட்டுகின்றது.இவரது இந்த மேலாண்மைச் சிந்தனையை வள்ளுவரின்,

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை

என்னும் உழவின் மேன்மையை உணர்த்தும் குறளோடு ஒப்பிட்டுப் பார்க்க முடியும். புலவரின் வாழ்த்துப் பின்வருமாறு

கூனிக் குயத்தின் வாய்நெல் அரிந்து
சூடுகோடாகப் பிறக்கி நாள்தொறும்
குன்று எனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடம் கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆகக்
காவிரி புரக்கும் நாடு கிழவோனே (பொரு 242-248)

காலம்காலமாக ஆண்களின் திறன்களையும், ஆளுமையையுமே விதந்து பேசக்கூடிய சமுதாயக் கட்டமைப்பில், பெண்கள் மறைக்கப்பட்டுவிடுகின்றனர். இலக்கியத்தின் வாயிலாக இவர்களது புலமைத்திறனை அறிவதன் மூலம் படைப்பாக்க ஆளுமையை உணரலாம்.

பார்வை நூல்கள்

1. பெ.சு.மணி, உலகப் பெண்பாற் புலவர்களும் சங்ககால ஔவையாரும்
2. மு.வரதராசன், இலக்கியத்திறன்
3. வ.சுப. மாணிக்கம், தமிழ்க் காதல்
4. திலகவதி.க, சங்ககால மகளிர் வாழ்வியல்
5. பாலசுப்பிரமணியன்.சி, சங்க கால மகளிர்